# இயல் 3 ஏறு தழுவுதல்

1. இலக்கியங்களில் ஏறு தழுவுதல் பற்றிய செய்திகளைக் குறிப்பிடுக.
   - சங்க இலக்கியமான கலித்தொகையில் ஏறு தழுவுதல் பற்றிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.
   - முல்லை நில ஆயர்களின் வீரத்தினை மெய்ப்பிக்கக்கூடியதாக உள்ளது.
   - முல்லைக்கலியில் ஏறு தழுவுதல் பற்றிய செய்தி காணப்படுகிறது.
   - காளைகளின் பாய்ச்சல் பற்றி கலித்தொகை கூறுகிறது.
   - இலக்கிய நூலான சிலப்பதிகாரத்திலும், இலக்கண நாளான புறப்பொருள் வெண்பாமாலையிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.
   - சிற்றிலக்கியமான பள்ளு இலக்கியத்திலும் குறிப்புகள் உள்ளன.
   - மாடு தழுவுதல் நிகழ்வைக் கண்ணுடையம்மன் பள்ளு பதிவு செய்துள்ளது.

2. ஏறு தழுவுதல் திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?
   - ஏறு தழுவுதல், முல்லை நிலத்து மக்களின் அடையாளத்தோடும் மருத நிலத்து வேளாண் குடிகளின் தொழில் உற்பத்தியோடும் பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடும் பிணைந்திருந்தது. இதுவே வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாளமாக நீட்சி அடைந்தது.
   - ஏரில் பூட்டி உழவு செய்ய உதவிய காளை மாடுகள், ஏர் மாடுகள், எருதுகள், ஏறுகள் என்று அழைக்கப்பட்டன. அறுவடைக்குப் பெரிதும் துணைநின்ற மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழாவே மாட்டுப்பொங்கல்.
   - மாடுகளைக் குளிப்பாட்டி கொம்பு சீவி, வண்ணம் தீட்டி அழகுபடுத்துவர்.

- தமிழகத்தில் மாடு பிடித்தல், மாடு அணைதல், மாடு விடுதல், மஞ்சுவிரட்டு, வேலி மஞ்சுவிரட்டு, எருது கட்டி, காளை விரட்டு, ஏறு விடுதல், சல்லிக்கட்டு எனப் பல பகுதிகளில் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது.

3. ஏறு தழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

- தமிழர்களின் வாழ்வோடும் உழைப்போடும் பிணைந்து கிடந்த மாடுகளுடன் அவர்கள் விளையாடி மகிழும் மரபாக உருக்கொண்டதே ஏறு தழுவுதலாகும்.
- தமிழகத்தில் நடைபெறும் ஏறு தழுவுதலில் காளையை அடக்குபவர்கள் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தக் கூடாது. நிகழ்வின் தொடக்கத்திலும் முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வர்;
- எவராலும் அடக்க முடியாத காளைகளை வெற்றி பெற்றதாகக் கருதப்படும்.
- அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.